4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. M. நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 833/2023 நாள்: 25.08.2025 வா.சா.2 – ராமர் மணிவண்ணன்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை - எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதி தான் சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான் வாதிக்கு நண்பர் என்றால் சரிதான், மேலும் நான் அவருக்கு அவ்வப்போது அக்டிங் டிரைவராகவும் இருக்கிறேன். வழக்கு விவரம் வாதி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 20.08.2023 நான் வாதி வீட்டிற்கு சென்றேன் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஆனால் நான் சென்றேன். என் பெயர் ராமர் மணிவண்ணன் என்பதை காட்டுவதற்கும், நான் அக்டிங் டிரைவராக வாதிக்கு இருக்கிறேன் என்பதை காட்டுவதற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் அக்டிங் டிரைவராக வேலை பார்க்கிறேன் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை, வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மீது நீதித்துறை நடுவர் எண்.2, உடுமலைபேட்டை காசோலை மோசடி வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அக்டிங் டிரைவர் என்பது அன்றாட பணி அல்ல, அவ்வப்போது ஏற்படுகின்ற பணி என்று சொன்னால் சரிதான். எனக்கு அக்டிங் டிரைவர் வேலை தவிர வேறு வேலை கிடையாது என்றால் சரிதான். நான் காசோலையின் அடிப்படையில் மற்றவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் மற்றவர்களுக்காக பினாமியாக வழக்கு தாக்கல் செய்வதும், சாட்சியம் அளிப்பதும் எனது வேலை என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கில் பிரதிவாதி, வாதிக்கு ஒரு கடனுறுதி சீட்டு எழுதி

கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கடனுறுதி சீட்டில் யார் சாட்சி கையொப்பம் போட்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாதி வீட்டிற்கு சென்றதே இல்லை, நான் அங்கு வைத்து பிரதிவாதி வாதிக்கு காசோலை கொடுத்ததாகவும் சொல்வது பொய், நான் பிரதிவாதியை வாதி வீட்டில் வைத்து பார்த்ததும் பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாதி வீட்டிற்கு வந்தபோது சபாபதி என்பவர் வாதி வீட்டில் இருந்தார் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வாதி எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.